273

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௫. } பிரமாதீச ௵ மார்கழி ௴ { பகுதி ௪

## கடவுளும் சமயமும்.

உலகம் பலவகைத் தோற்றத்தது. இவ்வுலகில் நாம் பார்க்கும் எல்லாப் பொருள்களும் தோன்றி இருந்து அழியும் இயற்கையன. குடம் முதலியவற்றைக் கண்டபோது அவற்றைச் செய்தவனொருவனுண்டென்பது போல இப்பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் நிலையையும் அழிவையும் உற்றுநோக்குமிடத்து கர்த்தாவாகிய செய்பவன் ஒருவன் இருக்கவேண்டுமென்பது எளிது புலனும். இதனை நாஸ்திகர் தவிர எல்லாச் சமயத்தாரும் அங்கீகரிப்பர். ஆகவே சிருஷ்டியாதி புரியுங் கருத்தாவுண்டென்பது துணியப்படும். அக்கருத்தாவைத் தான் * கடவுள் என்ற பெயராலழைக்கின்றோம். கடத்தற்றொழிலின் முதனிலையாகிய கட என்னும் பகுதியும், அவன் அவள் அது என்னும் ஒருமை மூப்பாலில் ஒன்றனை யுணர்த்தும் உள் என்னும் வினைமுதற்பொருள் விகுதியும் சேர்ந்து கடவுள் என நிற்றலால் கடந்த பொருள் என்பதே கடவுள் என்ற சொற்குப் பொருளாகின்றது. இப்பொருளே ஆன்றோர் கொண்ட பொருளாகும். இங்ஙனமின்றி கடவுள் என்பது கடத்தல் என்னும் பொருள் தந்து ஆகுபெயராய் கடத்தலையுடைய பொருள் என்பதை யுணர்த்து மெனக் கூறுவாருமுண்டு.

* கடவுள், பரம்பொருள், பதி, இறைவன் என்பன ஒரு பொருள்கள்.

கடந்த பொருளெனவே எவற்றைக் கடந்த பொருள்? எவ்வாறு கடந்தது? ஏன் கடக்கவேண்டும்? என்பனவாதிய சங்கை நிகழும். அன்றியும் கடக்கப்பட்ட பொருள்களு மிருக்க வேண்டுமாதலின் அப்பொருள்கள் யாவை? எனவும் ஆராய்ச்சி நிகழும். இங்ஙனம் ஆராயப்புகின் உலகில் உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகி மாயா சம்பந்தப்பட்ட சேதனு சேதனப் பொருள்கள் யாவும் கடக்கப் படுபொருள்க ளென்பது பெறப்படும்.

இனி எவ்வாறு கடந்ததெனின் நிலங்கடந்தான் நதி கடந்தான் என்புழி அவற்றோடு தோய்ந்து பற்றின்றி நீங்கினு னென்பது வெளியாதலின் அவ்வாறே சேதனுசேதனப் பொருள்கள் எல்லாவற்றுடனும் தோய்ந்தும், அங்ஙனம் தோய்தலால் உறத்தக்கதாகிய பற்றுச் சிறிதுமின்றி நீங்கி அப்பாற்பட்ட தெனக் கொள்ள வேண்டும். இதனுற்றன் "ஒன்று நீ யல்லை" எனவும், "எல்லாமா யல்லதுமாய்" எனவும், "அவனன்றி யோரணுவு மசையாது" எனவும், "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" எனவும் கூறுவர் பெரியார்.

இனி ஏனிவ்வாறிருக்க வேண்டும்? பொருள்களோடு தோய்ந்தாவது தோயாமலாவது இருத்தலாகாதோ எனின், ஆகாது. என்னை? பொருள்களோடு தோய்ந்திருப்பின் காணப்படுவன வெல்லாம் அழிபடுமாதலின் அப்பொருள்க ளழியும் போது தானும் அழிய வேண்டி வரும். தோயாது இருப்பின் கடவுட்கு அந்நியமாகிய பொருள்களுமுளவெனப்பட்டு எங்கும் நிறைதலின்மை பெறப்படும். ஆதலின் சர்வவியாபகமாய் எங்கும் நிறைந்தும் யாதொன்றினும் பற்றுமனும் எல்லாப் பொருள்களிடத்தும் எள்ளினுள் எண்ணெய் போல் அந்தர்யாமியாய் மறைந்து நிறைந்து இருத்தலே கடவுளின் இலக்கணமா மென்க.

இங்ஙனம் எல்லாப் பொருள்களிடத்தும் அந்தர்யாமியாகி மறைந்து நிற்பதுதான் கடவுளிலக்கணமாயின் அக்கடவுள் யாண்டுங் காணப்படாத பொருளோ எனின் காணப்படின் அழியப்படும். யாண்டும் காணப்படாதேல் முயற்கோடு ஆகாயப் பூப்போல் இல்பொருளாகும். ஆதலின் ஒருவாற்றாற் காணப்படாமையும், ஒரு

வாற்றாற் காணப்படுதலும் உண்டெனக் கொள்க. அறிவு வளர்ச்சியால் உலகத் தோற்றமாதியவற்றை யுய்த்துணரும் ஆற்றலில்லாத நாஸ்திகரால் காணப்படாத பொருளாகவும், உலகத்தோற்றமாதியவற்றை யுய்த்துணரும் அறிவாற்றல் கொண்டுள்ள ஏனைச் சமயத்தார்க்கு அவரவர் பக்குவத்துக் கேற்பச் சிலர்க்குப் பொதுமையாகவும், சிலர்க்குச் சிறப்பாகவும் காணப்படு பொருளாகவும் கூறப்படுவர். ஆயின் பொதுமைக் காட்சியாது? சிறப்புக்காட்சி யாதென ஆராய்வாம்.

ஒரு குகைக்குள்ளுற்ற சிங்கம் கர்ச்சித்தபோது அத்தொனியைக் கேட்டவருள் சிலர் இம்மலைக் குகையுள் யாதோ ஒரு பிராணியிருந்து சத்தமிடுகின்றது என்று மட்டும் அறிதல் போல பிரபஞ்சத் தோற்ற முதலியவற்றை நோக்கி உலகம் இங்ஙனம் நிகழ்தற்கு ஏதுவாகிய கர்த்தா ஒருவன் உண்டு என மாத்திரம் அறிதல் பொதுமைக் காட்சியாம். மற்றுஞ் சிலர் இங்கே கர்ச்சித்தது சிங்கம். அது வெண்ணிறமும் பரந்த முகமும் நான்கு பாதமும் சிறுகிய இடையும் கொண்டு மிருக வர்க்கத்துட் பட்டது என அறிதல் போல உலக காரணராகிய கர்த்தா இன்ன தன்மையர், இன்ன குணங்களுள்ளவர் என்பனவாகிய இலக்கணங்கள் முற்று மறிதல் சிறப்புக் காட்சியாம்.

ஆகவே இறைவனது சிறப்புக்காட்சி பெறுதல் இன்றியமையாததாயிற்று. இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்னும் சிறப்புக் காட்சியை அவனருளே கண்ணாகக் காணிற் காணலாமன்றி வேறு வகையாற் காணுதலமையாது. மாயா சம்பந்தமான உலக ஞானம் எதுவரையில் முனைத்து நிற்குமோ அதுவரையில் அவனருளாகிய கண்ணைப் பெறுதல் இல்லை. அருட்கண்ணைப் பெறவேண்டின் பாவச் செயல்களை விடுத்துப் புண்ணியச் செயல்களை மேற்கொண்டு, யான் எனது என்னும் அகப்பற்றையும் புறப்பற்றையும் அறக்களைந்து, சரியை கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களிற் பிரவேசித்து, "எல்லாமுனுடைமையே எல்லாமுனடிமையே யெல்லா முனுடைய செயலே" என்பதைக் கடைப்பிடித்து முயன்றால் நித்தியத்துவம், வசம்பிலா

ற்றல், வரம்பிலின்பமென்னும் சச்சிதானந்தப் பிழம்பாகிய கடவுள் ஆன்மாக்களின் இருவினை யொப்பு மலபரிபாக சத்திநிபாத பக்குவத்துக் கேற்றவாறு தாமே வெளிப்படுவர். இறைவன் வெளிப்படு முறையை அடியில் வரும் திருப்பாசுரம் இனிது விளக்கும்,

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் னிற்குமே.

இதன் பொருள்—இறைவன் விறகினிடத்து நெருப்புப் போலவும், பாலினிடத்து நெய்போலவும், மணியினிடத்து ஒளி போலவும் வெளிப்படாமல் மறைந்திருக்கின்றான். விறகிலிருந்து நெருப்பையும், பாலிலிருந்து நெய்யையும், மணியிலிருந்து ஒளியையும் பெறவேண்டியவர்கள் ஒரு கோலை நாட்டி அதிலொரு கயிற்றைப் பூட்டி யிழுத்துக் கடைய வேண்டும். கடைந்தால் நெருப்பும் நெய்யும் ஒளியும் வெளிப்படத் தோன்றும். அதுபோல மறைந்து நிற்கும் இறைவனையடைய விரும்பியவர்கள் பத்தியாகிய கோலை நாட்டி ஞானமாகிய கயிற்றை மாட்டிப் பலமுற இழுத்துக் கடைவார்களானால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளுவன் என்பதாம்.

இதனுள் விறகில் நெருப்புப்போலவும், பாலில் நெய்போலவும், மணியில் ஒளி போலவும் இறைவனுளன் என மூன்று வகைப்படுத்தினமைக் கேற்பவே "முறுக வாங்கிக் கடைய" எனக் கூறியதையும், முறுக வாங்கிக் கடைய, வாங்கிக் கடைய, கடைய என மூன்றுவகையாக்கிக் கொள்ளவேண்டும். விறகில் நெருப்பு எடுப்பவர் பலமாக இழுத்துக் கடைந்தால் தான் நெருப்புக் கிடைக்கும். பாலில் நெய் யெடுப்பவர் இழுத்துக் கடைந்தாலே போதும், நெய் வெளிப்படும். மணியில் ஒளியைக் காணுதற்கு பலங் கொண்டும் இழுத்தும் கடைய வேண்டாம். சாதாரணமாகக் கடைதலே போதும், ஒளி விளங்குவதாகும். இவ்வாறு மேலே மூன்றிடம் சொன்னமைக் கேற்ப கீழே முறையும் மூன்றாகக் கொள்ளக் கூறியருளினர். பத்தியானது எக்காலத்தும் எவ்வாற்றானும் சிறிதுஞ் சலனமுறாது

இறைவனிடத்தே அழுந்தி நிற்கவேண்டுமாதலின் அதனைத் தறியாகவும், ஞானமானது மேலும் மேலும் ஆராய்ந்து சென்று சேர்தலின் அதனைக் கயிறாகவும் கூறியது உய்த்துணரத்தக்கதென்க.

இங்ஙனம் மூன்று முறையாகக் கொண்டு கூறுமாறென்னெனில் தேவர் இருடிகள் மானிடர் முதலாக எழும் பிறப்புள்ள சகலர் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என மூவகையாவர். அவருள் மலபரிபாகம் வராத அபக்குவர்கள் தாம் செய்த கன்மத்துக் கீடாகப் புவனசரீரங்களை யெடுத்துப் போகங்களைப் புசித்துத் தொலைத்த பின்னர் மலபரிபாகம் வரப்பெற்று ஆசாரியரிடம் தீக்ஷையைப் பெற்று மோக்ஷத்தை யடைவர். இங்ஙனம் இவர் சிலகாலம் வருந்தி அடையவேண்டுதலின் இவர்க்கு "விறகிற் றீயினன்" என்க. விறகி லிருந்து நெருப்பெடுப்பவர் பலங்கொண்டு இழுத்துக் கடைந்தே எடுக்கவேண்டும். ஆதலின் "முறுகவாங்கிக் கடைய முன்னிற்கும்" எனக் கொள்க.

மந்தபக்குவராயுள்ள வைநயிகர் முதலாயினோர் மந்ததரம் மந்த மென்று சொல்லப்பட்ட சத்திபதியப் பெற்றவுடன் இறைவன் ஆசாரியனை யதிட்டித்து நின்று அவர்க் கநுகுணமான தீக்ஷையைச் செய்து அவர்கள் எந்தப் பதத்திலே யிருந்து போகம் புசிக்க விரும்பினார்களோ அந்தப் பதத்திலே அவர்களைச் சேர்த்துப் பின்னர் மோக்ஷம்பெறச் செய்தருளுவன். இவர்கள் அபக்குவரைப்போலப் பலநாள் வருத்தமெய்தாது சிலநாளில் இறைவனை யடையக்கூடியவர்களாதலின் இவர்க்கு இறைவன் "பாலிற்படு நெய்போல்வன்" எனவும், "வாங்கிக் கடைய முன்னிற்கு" மெனவும் கொள்க. பாலி லிருந்து நெய்யெடுப்பவர் விறகிற் றீயெடுப்பவர் போல் பலமுற இழுத்துக் கடைய வேண்டாது சுலபமாக வாங்கிக் கடைதலே சாலுமாதலின் பாலிற்படு நெய்போல்வன் வாங்கிக் கடைய முன்னிற்கும் எனக் கொள்ளவேண்டும்.

அதிபக்குவராவார்க்கு இறைவன் தீக்ஷையால் மந்ததரம் முதலிய நால்வகைச் சத்தியைப் பதிப்பித்துத் திவ்ய திருமேனியை யதிட்டித்துக்கொண்டு அவர்கள் பாசவிமோசனம் செய்து ஞானக்

கிரியைகளை விளக்கித் திதிகால முடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசிப்பித்து மகா சங்காரத்தில் மோக்ஷத்தை அடைவிப்பன். ஆதலின் இவர்க்கு ''மாமணிச்சோதியான்'' எனவும் ''கடைய முன்னிற்குமே'' எனவும் கூட்டியுரைக்க.மணியின் ஒளியை யுள்ளவாறு காணவிரும்பியவர் அதிசீக்கிரத்தில் மிகச் சுலபமாகக் கடைந்துகொடலே போதுமாதலின் அதிபக்குவர் விரைவாகவும் எளிதாகவும் இறைவனை யடையக்கூடு மாற்றல் மாமணிச்சோதியான் கடைய முன்னிற்கும் எனக்கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். இங்ஙனம் சகலருள் பகுக்கப்பட்ட மூவகையார்க்கு எனக் கொள்ளாது சகலர், பிரளயாகலர், விஞ்ஞாநகலர் என்ற மூவகையான்மாக்கட்குக் கூறிய மூன்று முறையே இவையெனக் கூறுவாரு முண்டு. இன்னும் இத்திருப்பாசுரப் பொருளை விரிப்பிற் பெருகும்.

இனி இத்தகைய கடவுள் ஒருவரா பலரா? எனின் கூறுதும். பலரெனின் அநவஸ்தாதோஷம் உண்டாம். ஆதலின் ஒருவர்தா னென்பது தெளிவாம். இக்கடவுளுடைய முக்கிய குணங்கள் யாவை யெனில் முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என ஆறுமாம்.

எல்லாப் பொருள்களையும் புலப்படக் காணும் அறிவுள்வழி யல்லது எல்லாத் தொழிலும் இயற்றல் கூடாமையின் முற்றறிவும், தமது அநுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றனை வேண்டில் பரிபூரணத் தன்மை யெடுபட்டுக் கடவுட்டன்மை கெட்டுப் போதலின் வரம்பிலின்பமும், முற்றறிவுடைய வழியும் அஃது அநாதி யன்றி அவாந்தரத்தில் வந்ததேல் காரண பூர்வகமாய் வந்ததெனின் வரம்பின்மைக் குற்றமும் காரணமின்றி வந்ததேல் காரணகாரிய நியமமின்மைக் குற்றமும் அடுக்குமாதலின் இயற்கையுணர்வும், பிறர்வயமுண்டேல் பாசத்தடையு முளதாகி வேண்டிய செய்தாமையும் வேண்டாத செய்தலும் ஆகிய குற்றம் பற்றலின் தன் வயமும், ஆற்றல் குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இளைப்பின்றித் தொழிலியற்றுதல் ஏலாமையிற் குறைவிலாற்றலும், அவ்வாற்றல் வரம்புபட்ட பரிமாணமுடையதாயின் வரம்புபடாத தொழிலியற்

றல் கூடாமையின் வரம்பிலாற்றலும் ஆகிய ஆறு குணங்களும் பதிக்கு இன்றியமையாமை காண்க.

தன் வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனக் குணங்கள் எட்டென்று கூறலு முண்டு. அன்றியும் யாதேனும் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலு மின்மையும் முக்கிய இலக்கணமாம். பிறந்திறக்கப்படுவன யாவும் ஆன்மவர்க்கத்தனவே யெனவும், அவையில்லாத பொருளே பரம்பொருளெனவும் நிச்சயிக்கப்படும். அத்தகைய கடவுள் உலக சிருஷ்டியாதி தொழில்கட்குக் கர்த்தாவாதலால் அத்தொழில்களில் தொடக்குற வேண்டுமே எனின் அற்றன்று. சூரிய சந்நிதானத்தில் சூரியகாந்தக் கல் நீரைக் கக்குதலும், தாமரை மலர்தலும் கண்கூடாகக் காணப்படினும் சூரியன் அவற்றிற் றொடக்குறுமை பெறப்படுதலால் உலக சிருஷ்டியாதி தொழில்கள் கடவுள் கிருத்தியமாயினும் கடவுள் அவற்றிற் றொடக்குறுமை பெறப்படுமாறு உய்த்துணரத் தக்கதொன்றும்.

## சமயம்.

இனி இத்தகைய கடவுளையறிந்து சென்று அடைதற்குரியமார்க்கங்களே சமயமெனப்படும். சமயம் அல்லது மதம்என்றற்கு இது தான்பொருளென்று தெளிந்த அவசரம் அல்லது பருவம் என்பது பொருளாகும். எல்லாச்சமயங்களும் தங்கள் தங்கள் கடவுளைப்பற்றிக் கூறுமிடத்துக் கடவுளிலக்கணங்களை யெல்லாம் நன்குகூறுகின்றன. ஆயின் அவ்வக்கடவுளரிடம் கடவுளுக்குரிய இலக்கணங்கள் யாவும் நிரம்பி யிருக்கின்றனவா வென்பது கவனிக்கவேண்டிய விஷயம். இக்கவனத்திற்கு முன் ஒருவிஷயம் மனத்திற் கொள்ளவேண்டும். சகல சமயங்களும் நன்மை செய்வனவேயாம். ஒரு சமயமாவது தீமை பயப்பதில்லை. சமயபோதனைகளெல்லாம் நன்மையைச்செய்யவேண்டுமென்பதும் தீமையை நீக்கவேண்டு மென்பதுமே. இங்ஙனம் நல்லொழுக்கத்தையே போதிக்குமுறையில் கடவுளுண்டெனக் கொள்ளும் சமயங்களே யல்லாமல் நாஸ்திக மதமுங்கூட நன்மை

செய்வதுதான். அதுவும் பொய்யாமை கொல்லாமை கள்ளாமை பிற னில்விழையாமை முதலிய நன்மைகளை மேற்கொண்டுண்மை யாலென்க. "எச்சமயத் தோர்சொல்லும், தீதொழிய நன்மை செயல்" என்ற திருவாக்கு இங்கே கவனிக்கத் தக்கது. இவ்வாறு அறச் செயல்களைச்செய்து வந்தால் புண்ணியமிக்குத் தெய்வபக்தியை யுதிப்பித்தல் செய்து ஆஸ்திக சமயத்துட் புகுவிக்குமென்பதும் பெறப்படும். கடவுளுண்டெனக் கொள்ளும் மதங்கள் பலவாயினும் பலநதிகளும் கடலைச் சேர்வதுபோல் முடிவில் பரம்பொருளையே சேரும். ஆயினும் சிலநதிகள் நேரே கடலைச் சேரும். சிலநதிகள் இடையிடையே சிற்சில குளங்களில் தங்கி அங்கங்கே தடையுற்றுநின்று அப்பாற்சென்று கடலைச்சேரும். சில நதிகள் சிறிது தூரஞ்சென்று நேரே கடலைச் சேர்கின்ற பெரிய நதியிற் சென்று கலந்து தானும் கடலைச் சேரும்.

இவ்வாறே மதங்களின் போக்கும் நிகழும். எவன் எந்தச் சமயத்தை மேற்கொண்டாலும் அந்தச் சமயநூல்களிற் சொல்லியவாறு ஒழுகிவருவானானால் நன்மைபெறுவது நிச்சயம் மதவைராக்கியங்கொண்டு என்கடவுள்தான் மெய் உன்கடவுள்பொய் எனச் சண்டையிட்டு உயிரைக்கொடுப்பவர் பலருண்டு. சமயநூல்களிற் சொல்லிய விதிப்படி யொழுகுபவர் சிலர்கிடைப்பது அருமை. இதனாற்றான் "மதத்துக்குச் சாவார் பலருண்டே, மதத்தின்படி யிருப்பார் சிலருமில்லை" என்றார் ஒருவர். இவ்வாறு பிணங்குதலின்றி எல்லா மதங்களையும் ஒதுக்கித்தள்ளாது சோபானமுறையாக அமைத்து ஏற்றுக் கங்காநதி கடலைச்சேர்வதுபோல நேரேபரம்பொருளை யடைதற்குரிய சற்சமயம் சைவ சமயமேயாம். இச்சைவ சமயக்கடவுள் கடவுளிலக்கணங்களெல்லாம் முற்றப் பெற்ற பரமசிவனே யாம். ஆன்மாக்கள் அவரவர்கள் செய்த கன்மங்கட் கிடாகப் புத்தமுதலிய புறச்சமயங்களிற் புகுந்து ஆங்காங்கு செய்யும் புண்ணிய முதிர்ச்சிக்கேற்ப அகச்சமயத்திற் பிரவேசிக்கப்பெற்று நாளடைவிற் செய்த பெரும்புண்ணிய வசத்தால் சைவசமயத்தில் வரப்பெறும். எவ்வெச் சமயத்திலிருப்பினும் அவ்வச்சமயக்கடவுளாகி அவரவர் வினைக்கேற்ப அருள்செய்பவர் சிவபிரானே. ஆதலால் சைவசமயம் எந்தச்சமயத்

தையும் தள்ளிவிடுவதில்லை. எல்லாவற்றையும் தான் ஏற்றுக்கொள்ளும் பெருமை இச் சைவ சமயமொன்றற்கே கிடைத்த பெரும் பாக்கியமாகும். இதனை

அறிவி னன்மிக்க வறுவகைச் சமயத் தவ்வவர்க் காங்கே யாரருள் புரிந்து, வெறியு மாகட லிலங்கையர் கோனைத் துளங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக், குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த, செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே.

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்
கறிவினி லறிவாய் மன்னி யம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி சேர்ப்பாம்.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தங்
கெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற மாகும்,

என்னும் பெரியார் திருவாக்குக்களால் அறியலாம். அன்றியும் பற்பல பிறவிகளிற் செய்த புண்ணிய விசேடத்தாலேதான் சைவ சமயத்தை யடையக்கூடு மென்பதை

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறியலாம்.

இனி எந்த மதஸ்தரும் தம்மதங்களையும் தம் மதக்கடவுளரையும் உயர்த்திக் கூறலாமே யன்றிப் பிறமதங்களை யேனும் பிறமதக் கடவுளரையேனும் நிந்திப்பது அடாது. வாதிக்க வந்த இடத்துத் தம் மதத்தி னுயர்வும் பிறமதங்களின் றாழ்வும் கூறலாமே யன்றித் தூஷிப்பது கூடாது. அங்ஙிலையில் பிறமதங்களின் குறைகளைக் கூறுதலைத் தூஷணையாகக் கருதல் கூடாது. எல்லா மதங்களையும் தழுவிச் செல்வது தான் உண்மைச் சைவமாகும். தற்காலத்துச் சிலர் சமரசம் எனப்பெயரிட்டுக் கொண்டு ஏசுகிறிஸ்து, அல்லா, புத்தர், அருகர், பிரமன், விஷ்ணு, சிவபிரான் முதலிய எல்லாரையும் ஒன்று போல் மதித்துப் பத்தி செய்யவேண்டு மென்கின்றனர். இங்ஙனம் ஒன்றாக மதித்துப் பத்தி செய்வது அறிவன்று. எவன் எந்த மதத்தை யனுசரித்தவனோ அவன் அந்த மதக் கடவுளினிடத்து அன்பு செலுத்தும்போது ஒருகற்புடைய நங்கை தன் கணவனிடத்துச்செலுத்தும் தலையன்பு போல் சிறந்த பத்தி செலுத்த வேண்டும்.

ஏனைக் கடவுளரைப் பற்றிக் கருதுமிடத்து அப்பெண்மணியானவள் தந்தை சோதரர் முதலிய ஏனையரிடத்துச் செலுத்தும் அன்பு போலச் சாதாரண அன்பு செலுத்த வேண்டும். ஆகவே நாயகனிடத்துச் செலுத்தும் அன்பிற்கும் ஏனையரிடத்துச் செலுத்தும் அன்பிற்குமுள்ள பேதம் மலைக்கும் அணுவுக்குமுள்ள பேதம்போலாகு மென்க. இவ்வுண்மையை யாவரும் நன்கு கவனித்தல் வேண்டும். இங்ஙனமின்றி எல்லாச் சமயக்கடவுளரையும் பதிப்பொருளென ஒரு நிகராகக் கொள்ளல் எதுபோலு மெனில், ஒரு பெண்ணானவள் உலகிலுள்ள எல்லாப் புருடரையும் நாயகனாகக் கருதல் வேண்டும் எனக் கூறலையொக்கு மென்க. இதனாற்றான்

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடுமெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே''

''கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்

எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாலெங்க ளுத்தமனே”

என்று சிவபிரானோடு பிறதேவர்கள் யாரையும் ஒப்பிட்டுக் கூறலாகாமையைப் பெரியார் பணித்தருளினர்.

அளவற்று விரிந்து கிடக்கும் எல்லாச் சமய சாத்திரங்களும் வேதாகமங்களிலே சுருக்கிக் கூறப்பட்டுள்ளனவேயாம். ஆயினும் அவற்றைச் சமுத்திர கலச நியாயமாக உருத்திரர்களும் தேவர்களும் இருடிகளும் தத்தம் அறிவினளவிற் கேற்பத் தனித்தனி விரித்துப்புறச்சமய உட்சமய சாத்திரங்களாகப் பல இயற்றுவாராயினர். ஒன்றோடொன் றொவ்வாத சாருவாக முதலிய பல சமயங்களைப் பற்றி வேதாகமங்கள் கூறலாமோ எனின் ஆன்மாக்களது அதிகார பேதம் பற்றி அவரவர் பக்குவத்துக்கேற்றதொன்றைக் கைக்கொண்டு அதன் வழியொழுகி மேற்செல்லுமாறு கருதியே யவ்வாறு வைத்தனவா மென்க.

இந்திரனுக்கு வியாழ பகவானே உலகாயத மத போதனை செய்ததும் அதற்குக் காரணமும் உலகப் பிரசித்த மன்றோ? இவ்வுண்மைகளை யுய்த்துணர மாட்டாது யானைகண்ட குருடர் போல ஒவ்வொருவர் ஒவ்வொரு சமய நூல்களைப் படித்து அதுதான் மெய்ச்சமய மெனக் கொண்டொழுகுவர். புண்ணிய வசத்தால் நல்லறிவுதலைக் கூடப்பெற்றவர்கள் பல சமய நூல்களையும் படித்தறிந்து சமயங்களும் சாத்திரங்களும் அவை கூறும் பொருளும் ஒன்றோடொன்றொவ்வாது பலதிறப் படுகின்றனவே, இவையிற்றுள் மேலாகிய சற் சமயம் யாது? அதற்குரிய சாத்திரங்க ளெவை? அவற்றாற் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருள் யாது?என ஆராய்ந்து இது ஆகும் அதுவன்று என்னும் பிணக்கின்றித் தன்னிடத்தே எல்லாச் சமயப் பொருள்களும் அடங்க நிற்பது எந்தச் சமயமோ அந்தச் சமயமே மெய்ச்சமயம் அதற்குரிய சாத்திரங்களே மெய்ச்சாத்திரங்கள். அவை கூறும் பொருளே மெய்ப்பொருள் எனத்தெளிவு கொள்வர். அங்ஙனம் ஆராய்ந்து தெளியுங்கால் சைவசமய

மும் வேதாகம வழிப்போந்த சித்தாந்த சாத்திரங்களும் பதி பசு பாச மென்னும் முப்பொருள்களும் அவருணர்வில் உறைத்து நிற்ப னவாகும். இதனை

"ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள், யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில் இதுவாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி, நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண நிற்பதியா தொருசமய மதுசமயம் பொருணூல், ஆதலினு லிவையெல்லா மருமறையா கமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீழ் நிற்கும்"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்முற் கடவுள் சிவபிரானே யென்பதும், சமயம் சைவசமயமே என்பதும் பெறப்பட்டன.

அறிவுறும் பொருளோ வீச னறிவுறா தவனே வென்னில்
அறிபொருள் அசித்து அசத்தாம் அறியாத தின்றும் எங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னனைப் போற்றுவார் அருள்பெற் றாரே.

சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

பத்திராதிபர்.

# கல்விப் பயன்.

பரம்பொருளையே தத்தமக்குப் பற்றுக்கோடாகவும் பெரும் பாக்கியமாகவும் கொண்டுள்ள ஆன்மாக்கள் நல்வினை தீவினை யென்னும் இருவினைகளுக்கும் ஈடாக நால்வகைத் தோற்றத்தையும் எழுவகைப் பிறப்பையும் எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந் திறந் துழலுமென வேதங்கள் விளம்புகின்றன. நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசமென்பவைகளாம். அண்டசம் என்பவை முட்டையிற்றோன்றுவன. சுவேதசம் என்பவை வேர்வையிற் றோன்றுவன. உற்பிச்சம் என்பவை வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுச மென்பது கருப்பையிற் றோன்றுவன.

எழுவகைப் பிறப்புக்களாவன: தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவைகளில் தேவர்களும் மனிதர்களும், மிருகங்களும் கருப்பையிற் றோன்றுவன. பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும் முட்டையிற் றோன்றுவன. புழு, பூச்சி, பேன், சில ஊர்வன, விட்டில்முதலியன வேர்வையிற் றோன்றுவன. விதைகளினின்றும், வேர்களினின்றும், கொடிகளினின்றும், கிழங்குகளினின்றும் தாவரங்கள் பிறக்கும்.

எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங்களாவன: பதினொரு நூறாயிர யோனிபேதம் தேவர்கள். ஒன்பது நூறாயிரயோனிபேதம் மனிதர்கள். பத்து நூறாயிர யோனிபேதம் மிருகங்கள். பத்து நூறாயிர யோனிபேதம் பறவைகள். பத்து நூறாயிர யோனிபேதம் நீர்வாழும் ஜந்துக்கள். பதினைந்து நூறாயிர யோனிபேதம் ஊரும் ஜந்துக்கள் பத்தொன்பது நூறாயிர யோனிபேதம் தாவரங்கள் என்று சொல்லப்படும் மரம்செடி கொடி முதலியன.

இவ்வான்மாக்கள் தத்தம் நல்வினை தீவினைக்கேற்க ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு, ஆறறிவுடையவைகளாய் வெவ்வேறு மெய்யைத் தாங்கிநிற்கும். புல், மரம், செடி, கொடி முதலியன பரிசத்தையறியும் ஓரறிவுயிர்கள். இப்பி, சங்கு முதலி

யன பரிசத்தோடு இரதத்தையறியும் ஈரறிவுயிர்கள். கறையான் எறும்பு முதலியன பரிசம் இரதம் ஆகிய இரண்டனோடு கந்தத்தையுமறியும் மூவறிவுயிர்கள். தும்பி, வண்டு முதலியன பரிசம், இரதம், கந்தம் ஆகிய மூன்றனோடு ரூபத்தையுமறியும் நாலறிவுயிர்கள். மிருகங்களும், பறவைகளும் பரிசம், இரதம், கந்தம், ரூபம் ஆகிய நான்கனோடு சத்தத்தையுமறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும், மனிதர்களும், பரிசம், இரதம், கந்தம், ரூபம், சத்தம் ஆகிய ஐந்தனோடு சித்தத்தாலறியும் அறிவுமுடைய ஆறறிவுயிர்கள். சித்தத்தாலறியும் அறிவற்ற மற்றையவுயிர்கள் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து தீமையைபொழித்து நன்மையைக் கொள்ளும் சாத்தியமுடையனவல்ல. ஆகையால், ஆறறிவுகளும் நிறையப்பெற்ற தேவர்களும், மனிதர்களும் பெற்ற தேகமே மிக மேலானதென்பது சர்வப்பிரசித்தம். (இவண் பேசப் புகுவது மனிதர்களைப்பற்றியாதலால் தேவர்களை விடுவது சம்மதமாகும்.) முற்காலத்தில் சிவசுப்ரமணியக்கடவுள் ஔவையாரைப் பரீக்ஷிக்கும்பொருட்டு ஔவையாரே உலகத்தில் அருமையாகிய பொருள் யாதென்று வினவியதற்கு ஔவையார் நங்கடவுளை விளித்து "கூர்மையாகிய நீண்ட வேலாயுதத்தையுடையவனே? உலகத்தில் அருமையாகிய பொருள் கேட்பையாயின் மானிடராகப் பிறப்பது அருமையினும் அருமை. மானிடராகப் பிறந்தபொழுதும் கூனுயிராமலும் குருடாயிராமலும் செவிடாயிராமலும், ஆணென்றும் பெண்ணென்றுஞ் சொல்லமுடியாத அலிகளா யில்லாமலும் பிறத்தலே அருமை. அப்படிப் பிறந்தபொழுதும் கல்வியையும், அறிவையும் விரும்புவது அருமையாகும். அப்படி அவைகளை விரும்பினலும் தருமத்தையும் தவத்தையும் கடைப்பிடித்தல் அருமையாகும். அத் தருமத்தையும் தவத்தையும் வழுவாது செய்வார்களாயின் சுவர்க்கத்துக்கு வழிதிறக்கப்படும்" என்று பொருள்படும்படி பாடியருளிய

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது

ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே''

என்னும் செய்யுளானும்,

கடல்களால் சூழப்பட்ட இவ் வுலகில் எழுவித பிறப்பையு டைய உயிர்களுக்கெல்லாம் நல்ல காட்சியைப் பெறும் நரஜன்மமாய்ப் பிறத்த லரிது என்று பொருள்படும்படி பாடியருளிய

''கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பில்மிக்க
காட்சிபெறு நரஜென்மமாய்க்
கருதப் பிறத்தலரிது''

என்னும் செய்யுளாலும்

நண்ணுவதற்கு அருமையாகிய அநேக பிறவிகளில் மானிடப் பிறவி மிக மேன்மை யென்று பொருள் படும்படி சுத்த சமரச சன் மார்க்க வள்ளலாகிய தாயுமானசுவாமிகளின் திருவாக்கானும் அறி யற்பாலது. அதாவது:

''எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரி தரிதுகாண்'' என்பதே.

இங்ஙனம் பெறுதற்கரிய மனிததேகத்தைப் பெற்ற ஆன்மாக்க ளுக்குத் துன்பமில்லையோவென்னில் ஆணவம்,மாயை,கன்மம் என்று சொல்லப்படும் மும்மலங்களாலும் பந்திக்கப்பட்டு பிரபஞ்சமாகிய சாகரத்தில் ஊழ்வினையாகிய அலையில் மோதப்பட்டு உழலுவதால் துன்ப மிகுதியேயாம். ஆனால், தங்கட்குக் கிடைத்துள்ள பகுத் துணர்வைக்கொண்டு துன்பக்கடலினின்று இன்பக்கரை யேறலா மென்பதே சர்வசமயசம்மதமாம்.

இனி,இப்பிரபஞ்சமாகிய சமுத்திரத்தினின்று கரையேறுவ தற்கு ஒருதெப்பம் வேண்டுமல்லவா? அத்தெப்ப மெதுவெனின், இறைவனுடைய திருப்பாதங்களையன்றி வேறில்லை. அப்பாதமாகிய தெப்பத்தைப்பிணைப்பதற்கு அன்பே கயிறாகும். அன்பென்றாலும் பக்தி யென்றாலும் ஒன்றே. இவ்வொப்பற்ற அன்பை விருத்தி செய்

வதெவ்வாறெனின், இறைவனுடைய புகழைக் காதாரக் கேட்டலினு லும், மனமாறச்சிந்தித்தலினுலும், வாயாரத்துதித்தலினுலுமேயாம். இக்கொள்கைக்கிணங்க

“மாலவன்றன் னுடலின்னுங் கரிதாக வருங்கொடிய
வாலமுண்டு துயர்கூரா தமராருயி ரளித்தோனைப்
பாலனுக்காக் கூற்றுதைத்த பண்ணவனைப் பவளவனம்
போல்பவனை யலதுநாப் போற்ருது போற்ருதே.

மண்ணகம்பொற் றிண்டோ மாமறைகள் பாய்பரியாத்
தண்மதிவெய் யோனிலங்கு பாண்டிலாத் தண்டுளவோ
னெண்ணிறவம் பாப்புரங்க ளொருமூன்று மொருங்கவித்த
கண்ணுதல்பொற் ருளன்றிக் காணுகண் காணுவே.

பாணிகருஞ் சிறைத்தும்பி படிந்தாடுங் கொன்றையந்தார்
வாணிலவு மதிக்கண்ணி வனைந்தருளும் புரிசடையோன்
சேணமர்ந்த தேவர்மணி முடியுழுது சேர்ந்தொளிர்பொற்
ருண்மலர்க்கல் லாதுசென்னி தாழாது தாழாதே.

கறையனற்பேழ் வாயுரக கங்கணத்தோ னெவனெழுதா
மறைமுழுதுந் தனியேத்தி வழிபடுவோ னெவன்கோணற்
பிறையணிந்தோன் யாவனீங் கவனல்லாற் பெட்பினெடு
மிறைவனென வெனதுள்ளத் தெண்ணேன்மற் றெண்ணேனே.

ஆதியாய் முழுமுதலா யருவுருவாய்ப் பூரணமா
யோதுநான் மறைதெளிந்த வுபநிடதப் பொருளாகி
நாதமாய் வெறுவெளியாய் நாரணனுங் காண்பரிதாஞ்
சோதியா லயமலது சூழாகால் சூழாவே.

மையநெடு வரைபோலும் மழமதமால் கரியுரித்துச்
செய்யதிரு மேனிதனிற் போர்த்தருளுஞ் சேவகன்ற
னையசெழும் பொற்கமல மலர்போலு மடியினல்லாற்
கொய்மலர்க டுவிநின்று கூம்பாகை கூம்பாவே”

என்பனவற்றுலும்

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே

என்னும் அருள் வாக்காலும்

"தலையே நீ வணங்காய்"– என்னும் திருவங்கமாலையானும் நம் பெரியோர் விளக்கியுள்ளார். அன்றி

அன்பு அதிகரிக்க ஞானம் விருத்தியாம். ஞானம் விருத்தியாக மோக்ஷம் சித்திக்கும். இக்கொள்கைக் கிணங்க மெய்ஞானச்செல்வரும் அந்தாதி யாசிரியருமாகிய பூதத்தாழ்வார் மெய்ஞானத்தைக் கொடுக்கக்கூடிய தமிழ்ப் பாஷையை விரும்பிக் கற்றுக் கொண்ட நான் ஸ்ரீமன் நாராயணருக்கு அன்பானது நெய்யையேற்குந் தகளியாய் ஆசையானது நெய்யாய் இனிமையாய் இளகுந்தன்மையுடைய மனமானது திரியாய் நல்லிரக்கத்துடன் மெய்ஞ்ஞானச் சுடரையுடைய விளக்கையேற்றினேன் என்று பொருள்படும்படிபாடியருளிய

"அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியாய்–நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்னும் வெண்பாவானும் தெளிதற்பாலது.

இங்ஙனம் சத்கைங்கரியங்களில் மனம் பற்றுமல் நமதரிய வாணுளை வீணுளாக்குவோமாயின், நம்மீது கருணை வைத்து இவ்வரிய மனிதசேகத்தைக் கொடுத்த இறைவனுக்கு நாம் அபராதி ஆவோம். இறைவனுக்கு வழிபாடுசெய்வதவசியந்தான். ஆனால் நமது வாணுளுக்குரிய இடம் பொருள் சௌகரிய முதலியவைகளைச் சேகரித்துக் கொண்டு பிறகு முற்கூறிய சத்கைங்கரியங்களில் பிரவேசிப்போமென்றுலோ? ஆன்மாக்கள் பிரபஞ்சமாகிய சமுத்திரத்தில் மாட்டிக் கொண்டபடியால் சமுத்திரத்தில் அலையும் புயலும் சுழலுமிருந்து கொண்டே யிருப்பதுபோல் பிரபஞ்சமாகிய கடலிலும் காலபேத வர்த்தமானங்களுக்குத் தக்கபடி சதா இன்ப துன்பங்கள் முதலியன இருந்து கொண்டேயிருக்கும். ஆனதால், நற்கர்மங்களைப்பிற்காலஞ் செய்வோமென்பது சமுத்திரத்தில் அலையொழிந்த பின்னீராடுவோமென்பது போலாம். அன்றியும்

நமது இளமையோ நீரிலுண்டாகி மறையும் குமிழி போன்றது. நமது செல்வமோ அந் நீரிற்றோன்றி மறையும் அலைகளுக் கொப்பாம். நமது தேகமோ அந் நீரிலெழுது மெழுத்தாகும். ஆகையால் நம்மவர்களே நம் கடவுளாகிய நடேசப்பெருமானுடைய திருவம்பலத்தைத் துதியாமை என்ன காரணம்? என்று பொருள் படும்படி

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று—என்றும்

இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே—எனவும்,

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"—என்றுமருளிய

நம் முன்னோர்களின் வாக்கின்படி நமது தேகமோ நிலையற்றது. இன்னநேரத்தில் விழுமென்பதுந் தெரியாதே. ஆனால் மறுபிறப்பி லாவது பூர்த்தி செய்துகொள்வோ மென்றாலோ, மனிதப்பிறப்பை விட் டிறந்தோர் மீட்டும் இதே மனிதப்பிறப்பை யடைந்து முன் தான் றேடியுள்ள செல்வ முதலிய அநித்யப் பொருளை அநுபவிப்பா ரென்ற திண்ணமில்லையே! இதனாலன்றோ? தாயுமானசுவாமிகள்

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ வறிகிலேன்"

என்றருளியுள்ளார். ஒருபிறவியில் தான்கற்றுக்கொண்ட கல்வியா னது ஏழுபிறப்பில் சென்று சென்று உதவுகின்றதுஎன்னுங் கருத் தமைத்து

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து"

என்ற தெய்வப்புலவர் திருவாக்கின்படி கல்வியே மறுபிறப்பையும் மனிதப்பிறப்பாக்கச் சக்தியுடையதாதலால் பொருள்களிற் சிறந்தது கல்விப்பொருளேயன்றி வேறொன்றில்லையென்பது ஆன்றோர்கொள் கைப்படி ஒப்ப முடிந்தது. (இன்னும் வரும்)

சு. பாலசுந்தரமுதலியார்
ஆக்கூர், மாயவரந்தாலூகா.

# கமலினி.

(௨௫௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

**களம் 7**

இடம்: ஷை அரண்மனையிலோரறை.

காலம்: மாலை.

(சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்: கமலினியும் மந்திரியும் வருகிறார்கள்.)

**சக்ரவர்த்தினி:**— (கமலினியின் கையைப்பிடித்து தன்பக்கத்திலுட்காரச்செய்து) கமலினி! நான்செய்த பெருங்குற்றத்தை மன்னிப்பாயா? நீ எனக்கு மாங்கிலியப்பிக்ஷை கொடுக்கவந்த புண்ணியவதியென்பதை யறியாமல் உன்னைக் கொலை செய்யும்படி சொன்னேனே? என்னை நீ எப்படி மன்னிக்கப்போகின்றாய்?

**கமலினி.**— அம்மணீ, நீங்கள் அப்படிச்சொல்லவே கூடாது. நீங்களேதாவது குற்றஞ் செய்திருந்தாலல்லவோ அதை நான் பொறுக்கவேண்டும்? நீங்கள் செய்தது குற்றமாகாது. ஏனெனில் உங்களுடைய நிலைமையில் யாரிருந்தாலுமப்படியேதான் செய்திருப்பார்கள்' அச்சமயத்திலுங்களுடைய நிலைமையைக்கவனித்தால் நீங்கள் செய்தது குற்றமென்று யாருஞ்சொல்லத்துணியார்கள்.

**சக்ரவர்த்தி:**— (கமலினியின் கையைப் பிடித்துக்கொண்டு) உன்னைப்போல் குணசாலியான பெண்ணை நானிதுவரையிற் கண்டதில்லை. நானின்னங்கொஞ்சநேரமதிகமாக நித்திரை செய்திருந்தால் இப்பாவிக ளெல்லோருஞ் சேர்ந்து உன்னுயிரை வாங்கியிருப்பார்களே?

**கமலினி:**— இவர்கள் யார் என்னுயிரை வாங்குதற்கு? கடவுளுடைய ஆக்கினையுமப்படி யிருந்தா லல்லது கேவலம் மனிதர்களாலென்ன செய்யமுடியும்? அவருடைய ஆக்கினையப்படி யிருந்திருந்தால் என்னுயிர் போயிருக்கும். அது அப்படி யில்லாததால்தான் இவர்களெல்லோரு முயற்சித்து மென்னுயிரை வாங்கமுடியவில்லை. ஆனல் ஒருவன் செய்த குற்றத்திற்கு மரண தண்டனை விதிப்பது மாத்திரம் பெருங்குற்றம். குற்றஞ்செய்த ஒருவனுக்கு தண்டனை விதிப்பது அவனைச் சீர்திருத்துவதற்கே யல்லாமல் அவனைப்பழி வாங்குவதற்காகவல்ல? அப்படியிருக்க அவனைக்கொன்று விட்டால் அவனைச்சீர்திருத்துவது எப்படி? மேலும் நம்மால் கொடுக்கமுடியாத உயிரை வாங்குவதற்கு நமக்கென்ன அதிகாரமிருக்கின்றது? கொடுக்கவல்லமையுள்ளவர்களுக்கு வாங்கவுமதிகாரமுண்டு, பகவானால் கொடுக்கப்பட்ட வுயிர் அவரால் வாங்கப்படலாமே ஒழிய கேவலம் நம்மால்வாங்கத்தகுந்ததல்ல. எந்த விஷயத்திலும் மாண தண்டனை விதிப்பது தகுதியன்று.

சக்ரவர்த்தி:— என்ன புத்தி உன்னுடைய புத்தி ?

கமலினி:— நான் சொன்னதைப்பற்றி மன்னிக்க வேண்டும். ராஜசபையிலிருப்பதை மறந்து ஏதோசொல்லிவிட்டேன்.

:—சக்ரவர்த்தி:— உன்னை மன்னிக்கும்படி அவ்வளவு தகாத காரியமொன்றும் நீ சொல்லவில்லை. அதைப் பற்றிப் பயப்படாதே. அஃதிருக்கட்டும் கமலினி நீ உன் விருத்தாந்த முழுவதுஞ் சொல்லவில்லையே. உன் தகப்பன் நெல்வேலியில் வயித்தியராயிருந்து இறந்துபோனாரென்று சொன்னாய். உன் தாய் இருக்கிறாளா ? சகோதரர்கள் வேறுபந்துக்கள் யாராவது இருக்கிறார்களா ? இருந்தால் சொல்லு. அவர்களை யிங்கு வரவழைக்க லாமென்றெண்ணுகிறேன்.

கமலினி:— நானவ்வளவு பாக்கியஞ் செய்தவளல்ல. என்னைத் தவிர எனக்கு வேறொருவருங்கிடையாது. என்தாய் என்னை இளம் பிராயத்திலேயே விட்டு விட்டு இறந்துவிட்டாள். என் தகப்பனே என்னை வளர்த்து வந்தார். இரண்டுவருடங்களுக்கு முன் அவரும் என்னை அநாதியாய் விட்டுவிட்டிறந்து போனார். அவர் நெல்வேலி யரண்மனை வயித்தியராயிருந்தபடியால் —

சக்ரவர்த்தி:— ஆனால் நீ மிருத்யுஞ்செயவயித்தியரின்மகளா? அவ்வரண்மனையிலேயே வளர்ந்து வருகிறதாகக் கேள்விப்பட்டேன்.

கமலினி:—ஆம் நான்தான்.

சக்ரவர்த்தி:—உன் தகப்பனை எனக்கு நன்றாய்த்தெரியுமே. நீ ஏன் வந்தவுடன் சொல்ல வில்லை ? அவரால்தான் இவ்வளவு சிறந்த மருந்து தயார் செய்திருக்கக்கூடும். உன்னுடன் இன்னமொரு பெண்வந்திருக்கிறதாகச் சொன்னார்களே அவள் யார் ?

கமலினி:—என் தாயிறந்த நாள்முதல் என் வீட்டிலிருந்து என்னை வளர்த்துவந்த பெண்மணி. அவள்தான் எனக்குத்தாய். எனக்குத்துணையாக அழைத்து வந்தேன்.

சக்ரவர்த்தி,—அஃதெல்லாமிருக்கட்டும் கமலினி, நெடுநாளாக என்னை வருத்திக்கொண்டிருந்ததும் மற்றையவயித்தியர்களால் குணப்படுத்தமுடியாததுமான என்னுடைய நோயை நீ மூன்று தினங்களில் குணப்படுத்தி விட்டாய். என்நோயை குணப்படுத்து கிறவர்களுக்கு வேண்டியதிரவியங்களும் பூமியுங்கொடுப்பதாய் உத்தரவு செய்திருக்கிற விஷயம் உனக்குத் தெரிந் திருக்கலாம். அஃதல்லாமலும் நீ அநியாயமாய் கஷ்டப்பட்டதை யுத்தேசித்து நீ என்ன கேட்டபோதிலும் கொடுப்பதாக்த் தீர்மானித் திருக்கிறேன். உனக்குவேண்டியதைச்சொல்லு.

கமலினி;—பூபதி! திரவியங்களும் பூமியும் எனக்கு என்ன பிரயோஜனப்படப்போகின்றன? நானோ ஒரு.பெண். நெல்வேலி மன்

னனதரண்மனையில் அவ்வரண்மனைக் குழந்தை போலவே யாதொரு குறைவுமின்றி வளர்ந்து வருகிறேன். எனக்குத் திரவியங்களாலும் பூமியாலும் என்னபயன்? அப்படி எனக்கொன்றுந் தேவையில்லை.

சக்ரவர்த்தி:—என்ன ஆச்சர்யம்? சிறு பெண்ணுயிருக்கின்றாய் ஒன்றுந்தேவையில்லை யென்று சொல்கிறாயே.

கமலினி:—எனக்கு ஏதாவது குறைவு இருந்தாலல்லவோ தேவையிருக்கும். எனக்கு அப்படி யாதொரு குறைவுமில்லை. அப்படியொரு தேவையுமில்லை.

சக்ரவர்த்தி:— பூமி, திரவியம் ஒன்றுந்தேவை யில்லாதபோதிலும் வேறேதாவதுனக்கு வேண்டுவதுண்டா.

கமலினி:—(சற்று யோசித்துக்கொண்டிருந்து) நான் என் தாயினிடம யோசித்து வந்து எனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள்கிறேன்.

சக்ரவர்த்தி:—சரி அப்படியேசெய் (கமலினி விடைபெற்றுப் போகிறாள்.) என்ன ஆச்சர்யம் ஒரு பிரதிபிரயோஜனத்தையுமெதிர்பாராமல் இப்பெண் என்னைக் குணப்படுத்துவதற்கு வந்திருக்கக்கூடுமா?

மந்திரி:—ஒன்றைக் கருதியேதான் வந்திருக்கிறாள். சொல்வதற்கு வெட்கப்படுகிறாள் போலத் தோன்றுகிறது.

சக்ரவர்த்தி:—வேண்டியதை நம்மிடத்தில் கேட்பதில் வெட்கமென்ன இருக்கிறது?

மந்திரி:—அது வெட்கப்படக்கூடிய காரியந்தான்.

சக்கரவர்த்தினி:—ஆனாலவள் கொண்டிருக்கிற எண்ணம் உங்களுக்குத் தெரியும்போல் தோன்றுகின்றதே.

மந்திரி:—ஆம். எனக்குத்தெரியும். நெல்வேலியாளும் வீரகேசரி மன்னனை மணஞ்செய்யக் கருதி தங்களால் விவாகத்தை முடித்துக்கொள்ள எண்ணங்கொண்டு இங்கு வந்திருக்கிறாளென்று தெரிகின்றது.

சக்ரவர்த்தி:—என்ன புதுமையா யிருக்கின்றது? அவ்வரண்மனையிலேயே வளர்ந்து வருகின்றதாகச் சொல்லுகின்றனள். அவர்களிருவர்களுக்கு மிஷ்டமிருந்தால் விவாகத்தை முடித்துக்கொள்ளலாமே? இதற்கு இங்கு வருவானேன்.

மந்திரி:—இவளுக்கு அம்மன்னன்பேரில் காதல் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதே யொழிய அவருக் கிவளிடத்தில் காதலேற்பட்டிருக்கிறதாகத் தெரியவில்லை. ஆகையால்தான் இங்குவந்து தங்களைக் குணப்படுத்தித் தங்கள் மூலமாக அவரை விவாகத்திற்குச் சம்மதிக்கும்படி செய்யலாமென்ற எண்ணத்துடன் வந்திருக்கிறதாகத் தெரிகின்றது.

சக்ரவர்த்தினி:—இவையெல்லா முங்களுக் கெப்படித் தெரிய வந்தது? உங்களிடத்தில் கமலினி சொன்னுளா?

மந்திரி:—என்னிடத்தில் சொல்லவில்லை. அவளைச் சிரசாக்கினை பண்ண உத்தேசித்த காலத்தில் அவளுடன் வந்திருக்கிற பெண்ணிட மவளுக் கேதாவது சங்கதி சொல்ல வேண்டு மென்றால் சொல்லிக்கொள்ளலா மென்று சொன்னேன். அப்பொழுது கமலினி அப்பெண்ணை யழைத்துச் சில சங்கதிகளைச் சொல்லிவிட்டுக்கடைசியாக "வீரகேசரி மன்னனைத் தனியாகச் சந்தித்து அவரிடத்திற் கொண்ட காதலாலே இக்கதியானேன். அவரை மணஞ்செய்யக் கருதியே இத்துன்பத்திற் காளானேன் என்று சொல்" என்று சொன்னுள். ஆகையா லிவள் காதல் கொண்டிருக்கிறுளென்றும் இவள் கொண்ட காதல் மன்னனுக்குத் தெரியாதென்றும் விவாகத்தைத் தங்களால் முடித்துக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறுளென்றும் ஊகித்தேன்.

சக்ரவர்த்தினி:—ஆனல் கோமதிக்கும் இந்த ரகசியம் தெரிந்திருக்கு மென்றே தோன்றுகிறது.

சக்ரவர்த்தி:—ஆம். நீ அவளிடத்திலும் அதன் உண்மையை யறிந்து சொல்லு. கமலினியின் எண்ணம் அப்படி யிருக்குமானு லவள் கொண்ட எண்ணத்தை முடித்துவைப்பதே நம்முடைய கடமை. மந்திரி, நெல்வேலி மன்னனையு மவர் தாயையு மிங்கு வரும்படி திருமுக மனுப்புங்கள்.

மந்திரி:—உத்தரவு அப்படியே செய்கின்றேன்.

(உத்தரவு பெற்றுச் செல்லுகிறார்)

சக்ரவர்த்தி:—கண்மணி, நீ கோமதியினிடத்தில் விசாரித்துச் சொல்லு. நெல்வேலி மன்னனும் வந்து சேரட்டும். அதைப் பற்றி யோசித்துச் செய்வோம்.

சக்ரவர்த்தினி:—அவளிடத்தில் கேட்டுச் சொல்கிறேன்.

(போகின்றார்கள்)

சக்ரவர்த்தி:—நான் கொண்டிருக்கிற எண்ணத்திற்கு இன்னுஞ் சரியாகவே முடிந்தது. நம்முடைய சிற்றரசர்களுக்குள் வீரகேசரி மன்னனே மகா பராக்கிரமசாலி; புத்தியினுஞ் சிறந்தவர். நமது பட்ட மகிஷிக்குப் பந்துவாகவு மிருக்கின்றார். அவருக்குக் கமலினியை விவாகஞ் செய்துவைத்து முடிவில் நம்மெண்ணத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். இவ்விராச்சியத்தைப் பற்றிய கவலை ஒரு விதமாய்த் தீர்ந்தது. நமது பட்டமகிஷி யிடத்திலும் யோசித்துக் கொள்வோம். (போகின்றார்)

(இன்னும் வரும்)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை.

# புத்தகக் குறிப்பு.

ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் சிந்து:— மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருவுளப்படி ஷ ஆதீன வித்துவான் ஸ்ரீமத் மு. கோவிந்தசாமியய்யரவர்கள் இயற்றிய இந்நூல். பெரியபுராணத்துட் கூறப்பட்டவாறே ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரத்தை பக்திச் சுவைநிரம்பவும் படிப்போர்க்கு இனிமைபயக்குஞ் சந்த சுவையுடன் சொற்பொருட் சுவைகளும் மலியவும் நன்கு அமைத்துப் பாடப்பெற்றிருக்கிறது. சமையாசாரியசுவாமிகள் சரித்திரத்தை வல்லாரே யன்றி எல்லாருமுணர்ந்துய்வான் கருதியே இந்நூல் பாடப்பெற்றதாகத் தெரியவருவதால் இது தற்காலத்துக்கு ஏற்றதென்றே யாமும் நினைக்கிறோம். இந்நூலாசிரியராகிய ஐயரவர்கள் சிறந்த சைவாபிமானமுடையவர்களெனபதும் நல்ல வாக்கு வல்லபமுடையவர்களென்பதும் யாம் நேரிலறிவோம். இந்நூற்கு ஷ ஆதீன வித்துவானும் சைவசித்தாந்த நூலாராய்ச்சியிற் சிறந்த வைதிகசீலருமான ஸ்ரீமத் சுப்பிரமணிபிள்ளையவர்கள் முகவுரையும் சில வித்துவான்கள் சாற்றுக்கவிகளும் கொடுத்திருக்கிறார்கள்.

திருவிலஞ்சிக்குமரக்கடவுள் காவடிச்சிந்து:—இது இலஞ்சி நகரில் எழுந்தருளும் முருகக்கடவுள் மீது அந்நகர்வாசியும் திருக்குற்றாலநாதர் கோவில் தருமகருத்தரும் ஆகிய ஸ்ரீமான் புதுவீடு. எஸ். சுப்பிரமணிபிள்ளை யவர்களால் தோத்திரமாகப் பலவகைச் சந்தத்தில் பாடப்பெற்றது. பிள்ளையவர்கள் அன்பு கசிந்து பாடியதனால் மனவுருக்கத்துக் கேற்றதாக இருக்கிறது.

மேலே கண்ட இரு சிந்து நூல்களையும் எமது பார்வைக் கனுப்பிய நூலாசிரியரிருவருக்கும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேம்.

பத்திராதிபர்.

# சமாசாரக் கொத்து.

26—12—13. மாலை 5மணிக்கு மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனமடாலயம் ஸ்ரீஞானசம்பந்தவிலாசத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னர் ஒரு பெருஞ் சபை கூடியது. மதுரையிலுள்ள வடமொழி தென்மொழி வித்துவான்கள் சுமார் 20 பேர்களும் மற்றும்பல தக்கவர்களும் நிரம்பியிருந்தார்கள். மகிபாலன்பட்டிவித்துவான்ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் ''சிவாநுபவம்'' என்றவிஷயத்தைப்பற்றி மிகவும்அருமையாக உபந்

யசித்தார்கள் தசகாரியமுடிவானசிவபோகமேசிவாநுபவம் என்றெடுத்து சிவத்தினியல்பையும் ஆன்ம இயல்பையும் அநுபவ முறையையும் விரித்து வடமொழி தென்மொழிப் பிரபலபிரமாணங்களைக் காட்டி உயிரநுபவம், அருளநுபவம், சிவாநுபவம் என்பவற்றை விஸ்தரித்து எல்லாரும் பரவசப்படும்படி சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களை ஆங்காங்கு தெளிவுபெற எடுத்துக்காட்டி 2 மணி நேரம் அமிர்த வருஷம் பொழிந்தது போல உபந்யசித்து முடித்தார்கள். கருணையங் கடலாகிய ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதான சற்குருசுவாமிகள் மிக மகிழ்ந்து செட்டியாரவர்கள் உபந்யாசத்திறமையையும் உபந்யசித்த விஷயத்தின் அருமையையும் மிகப் பாராட்டித் திருவாய்மலர்ந்து கட்டளையிட்டருளியதுடன் அழகிய ஒரு பீதாம்பரத்தைச் செட்டியாரவர்கட்குப் போர்த்தி ஆசி கூறியருளி நமது, ஆதீனத்தில் அடுத்தடுத்து இத்தகைய பிரசங்கங்கள் நடைபெறுதலில் தமக்குப் பெருமகிழ்ச்சியே யெனவும், ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் குருபூசைவிழாவில் 10 நாளும் இப்படிப்பட்ட சிறந்த உபந்யாசங்களை நன்கு நடத்துவிப்பதாகவும் சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்துவருதற்குத் தம்மாலியன்றவுதவி புரியத் தயாராயிருப்பதாகவும், மற்றும் எல்லா வித்துவான்கட்கும் மனக்கிளர்ச்சியுறும் வண்ணம் கட்டளையிட்டருளினார்கள். வித்துவான்கள் எல்லாரும் செட்டியாரவர்களது கல்வித்திறமையையும், மதிநுட்பத்தையும், சொல்வன்மையையும் பற்றி மிக வியந்து பாராட்டி வாழ்த்தினார்கள். இரவு 8—30—க்கு நிறைவேறியது.

---

அமெரிக்கா தேசத்திலே பெரிய பீரங்கி ஒன்றைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அது சுமார் 16 கஜம் நீளமுள்ளது. அதற்கு உபயோகப்படுத்தும் குண்டுகள் 100 மணங்கு பளுவுள்ளன. இந்தக் குண்டுகளை அந்தப் பீரங்கி 16 மைல் தூரம் போக்குமாம்.

---

ஆகாய விமான வித்தியாசாலை:—இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஆகாய விமானத்தில் செல்லும் முறையைக் கற்றுக் கொடுப்பதற்காக இந்தியாக் கவர்ண்மெண்டார் ஸீதாப்பூரில் ஒரு ஆகாய விமான வித்தியாசாலை ஸ்தாபிக்கும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்.

---

தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையின் முதலாம் வருஷோற்சவம் தைமீ 8, 9, 10௨ களில் நடைபெறும். அறிஞர்கள் பலர் உபந்நியாசம் புரிவார்கள்.

பத்திராதிபர்: